கொண்டிருக்கிறோம். அப்பொழுதே நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். நம்முடைய குறிக்கோள் என்னவென்றால், நான்கு ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு ஒரு ப்ரைமரி ஹெல்த் சென்டர் அப்கிரேடட் ஆக இருக்கவேண்டுமென்பது நம்முடைய இறுதிக் குறிக்கோள்.

புற்றுநோய் உண்டாவதற்கான காரணங்கள்

107 (*வினா எண் 15203)—திரு. ஜே. எஸ். இராசு ; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புற்றுநோய் உண்டாவதற்கான காரணங்கள் யாவை?

(ஆ) புற்றுநோய் சிகிச்சைக்கான மருத்துவ வசதிகள் தமிழகத்தில் எந்தெந்த மருத்துவ மனைகளில் உள்ளன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை **ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஜே எஸ். இராசு : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, தொடக்கத்திலேயே ஒருசிறிய பரிசோதனையின் மூலம் புற்றுநோயா அல்லவா என்று துல்லியமாகக் கண்டுபிடிக்க ரஷ்யாவில் ஒரு கருவியைக் கண்டுபிடித்திருப்பதாக அறிகிறோம். அது பற்றி அரசுக்குத் தெரியுமா ? ஆமெனில், அந்தக் கருவியை வரவழைத்து நம்முடைய நாட்டு மக்களுக்குப் பயன்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தக் கருவியை வரவழைப்பதைவிட மிக முக்கியமாக நாம் செய்ய வேண்டியது என்னவென்றால் தமிழகத்திலுள்ள அத்தனை தாய்மார்களுக்கு பாம்ஸ்மியர் என்ற டெஸ்டை, சர்வைகல்ஸ்மியர் என்ற டெஸ்டைச் செய்துவிட்டால் அவர்களில் பலருக்கு சர்வைகல்ஸ்மியர் கேன்சர் என்பது வருவதற்கு முன்பே நமக்குத் தெரிந்துவிடும். தமிழகத்தைப் பொறுத்தவரையில் பாம்ஸ்மியர் என்ற டெஸ்டை எடுத்துப் பார்க்க வேண்டும் என்ற அந்தத் திட்டத்தை முழுமைப்படுத்த வேண்டும் என்று அந்தத் திட்டத்தில் நாம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

திரு. ஜே. எஸ். இராசு ; மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, ஆயுர்வேத முறையில் புற்றுநோயைக் கண்டுபிடிப்பதற்கான முறைகள் இருக்கின்றனவா ? அப்படியென்றால் அது எந்த அளவிற்குப் பயன்படுத்தப்படும் என்பதை அமைச்சரவர்கள் கூறுவார்களா ?

*384-385-ம் பக்கங்களில்—இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

1984 பிப்ரவரி 21]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அதுபற்றி இப்பொழுது எந்தவிதமான திட்டவட்டமான ஒரு செய்தியும் நம்மிடத்தில் இல்லை.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவரவர்களே, காஞ்சீபுரத்திலுள்ள அறிஞர் அண்ணா புற்றுநோய் நிலையத்தை இன்டர்நேஷனல் ரிசர்ச் இன்ஸ்டிட்யூட்டாக மாற்றுவதற்கு அரசு ஏதேனும் உத்தேசித்துள்ளதா ? அம்மருத்துவ மனையின் வளர்ச்சிக்கு என்னென்ன செயல் திட்டங்களை வைத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காஞ்சீபுரத்தில் பேரறிஞர் அண்ணாவினுடைய பெயரிலே இயங்குகின்ற அந்த மருத்துவமனையைப் பொறுத்த வரையில், ஏற்கனவே 100 படுக்கைகளுக்கு ஒரு மருத்துவமனை இருக்கிறது; இப்பொழுது 250 படுக்கைகளுக்கு ஒரு மருத்துவ மனையாக, நல்லதொரு பெரிய மையமாக, ஸ்தாபனமாக ஏற்படுத்த ஏறத்தாழ 5 கோடி ரூபாய் செலவில் அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டு வருகிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்கள் அதைப்பற்றி கவலை தெரிவித்திருக்கிறார்கள். இன்னும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் உடனடியாக இயங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-50)

டாக்டர் கே. சௌரிராஜன் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குறிப்பாகக் கருப்பையில் ஏற்படும் புற்றுநோயைக் குணப்படுத்துவதற்குத் தனியான இடங்கள் மதுரை, சென்னையில் தான் இருக்கின்றன. நாம் மருத்துவக் கல்லூரி நடத்திக் கொண்டிருக்கிறோம். கோவை, திருநெல்வேலி, தஞ்சாவூர் என்று இப்படி மூன்று இடங்களில் மருத்துவக் கல்லூரிகளை நாம் நடத்துகிறோம். அந்தக் கல்லூரிகளை ஒட்டிய மருத்துவமனைகளில், கருப்பையில் உருவாகக்கூடிய நோயினைப் பற்றி அறிந்துகொள்கின்ற வகையிலே ஒரு ஸ்பெஷல் கான்சர் டிப்பார்ட்மென்ட் இருக்கின்றதா? இல்லை என்றால் அவ்வாறு உருவாக்க உடனடியாக அரசு முன்னுரிமை அளித்து ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே ; தலைவர் அவர்களே, இது எனக்கு மிகவும் துணையாக இருக்கக்கூடிய கேள்வி. இருப்பினும் நிதிநிலையைப் பொறுத்துத்தான் இதைச் செய்ய வேண்டும்.

Primary Complex என்னும் காசநோய்க்கான அறிகுறிகள்

108 *(வினா எண் 15668)*—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—